# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8092384

1. District மாவட்டம் : Tiruvannamalai PS: காவல்நிலையம் V & AC. Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 08/2019 Date: நாள் 27-03-19

2. (i) Act சட்டம்: The PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: by PC (Amendment) Act 2018. Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Crpc Sections பிரிவுகள்: 102.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 01-11-18 Date to நாள் வரை : before 1300 hrs.
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02-11-2018 Time நேரம் : 1500 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 02-11-2018. Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Regional Transport office, Tiruvannamalai. North 3kms
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. Krishnamoorthy (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் District-inspection cell officer. (g) Address : முகவரி District Inspection cell officer, Vellore and Tiruvannamalai District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
A1) Tr. D. Arivazhagan, Regional Transport officer, Tiruvannamalai.
A2) Tr. V. Ramkumar, Motor Vehicle Inspector, Grade-I, Regional Transport office, Tiruvannamalai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
For obtaining Previous approval from the concerned department as per 17(A) of PC (Amendment) Act 2018.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

(... separate sheet if necessary)

Separate sheet enclosed.

... the above ... commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case ... Rank ................... to take up the investigation / Refused ... on point of jurisdiction.

... correctly recorded and a copy given to the Complainant / ...

27/3/19

Signature of the Officer in-charge, Police Station

27/3/19

M. Rajanikanth,
Inspector of Police,
VBAC, Tiruvannamalai.

27-03-19 at 12.00hrs.

**SUBMITTED:**

இன்று 27.03.2019-ந் தேதி காலை 10.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்த போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனரிடமிருந்து பெறப்பட்ட தபால் SC.No.39789/2018/TPT/TVM –ன் படி திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து அலுவலர் D.அறிவழகன் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.V.ராம்குமார் அவர்கள் மீது முதல்தகவல் அறிக்கை பதிவு செய்ய வந்த உத்தரவின் அடிப்படையில் மேற்படி உத்தரவை படித்து அதன்பேரில் கடந்த 02.11.2018-ந் தேதி மாலை 15.00 மணியளவில் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை அலுவலகத்திற்கு நேரில் ஆஜராகி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தட்டச்சு செய்து கொடுத்த புகாரை இன்று 27.03.2019-ந் தேதி பகல் 1030 மணிக்கு பரிசீலனை செய்து மேற்படி உத்தரவின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அது பின்வருமாறு அனுப்புநர் T.கிருஷ்ணமூர்த்தி, ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. நாள்: 02.11.2018, அய்யா, பொருள்: திடீர் ஆய்வு சோதனை – திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 01.11.2018 அன்று கூட்டு திடீர் ஆய்வு சோதனை மேற்கொண்டது - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணம் – ஒப்படைப்பு - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. பார்வை: சம்மந்தப்பட்ட ஆவணங்கள், நான் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக உள்ளேன். திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலையில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகன ஓட்டுனர் உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல், வாகனங்களின் பதிவு சான்றிதழ் வழங்குவதற்காக இடைத்தரகர்கள் (புரோக்கர்கள்) மூலம் மற்றும் நேரடியாக பொது மக்களிடம் லஞ்சம் பெறுவதாக வந்த நம்பகமான தகவலின் அடிப்படையில், 01.11.2018-ஆம் தேதி பிற்பகல் 1300 மணியளவில் திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வேங்கிக்காலில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா கட்டிடத்தில் இயங்கி வரும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நான் மற்றும் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் இணைந்து திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த அலுவலகமானது திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்தை சுற்றி சுற்று சுவர் கட்டப்பட்டு

இரண்டு வழிகள் உள்ளது. பிரதானவாயில் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. பிரதான வாயிலில் நுழைந்தவுடன் பெரிய வராண்டா உள்ளது. வராண்டாவின் நேரெதிரே நேர் முக உதவியாளரின் அறை சுமார்10'x10' என்ற அளவில் உள்ளது. அது கண்ணாடியால் தடுக்கப்பட்டுள்ளது. நேர்முக உதவியாளரின் அறையின் மேற்கே வட்டார போக்குவரத்து அலுவலரின் அறை அமைந்துள்ளது. அது சுமார் 25'x15' அளவுள்ள அறையாக உள்ளது. அறையின் தென்மேற்கு மூலையில் வட்டார போக்குவரத்து அலுவலரின் இருக்கை அமைந்துள்ளது. வட்டார போக்குவரத்து அலுவலரின் இருக்கைக்கு எதிரில் இரண்டு கம்ப்யூட்டர் டேபிள்கள் உள்ளன. அறையின் தென் கிழக்கு மூலையில் இரும்பு பீரோ ஒன்றும், அதன் அருகில் கழிவறையும் உள்ளது. வட்டார போக்குவரத்து அலுவலரின் அறையை ஒட்டியவாறு கிழக்கு பார்த்த வாசற்படியுடன் "A" Section அமைந்துள்ளது. அந்த அறையின் உள்ளே நுழைந்தவுடன் கண்ணாடி தடுப்புகளால் தடுக்கப்பட்டு, வடக்கு பார்த்த வாசற்படியுடன் நான்கு இருக்கைகள் அமைந்துள்ளன. அவை A-4, B-3, A-1, A-2 மற்றும் A-Superintendent இருக்கைகள் உள்ளன. பின்னர் நேர்முக உதவியாளரின் அறையின் அருகே 15'x15' அளவுள்ள கணினி அறையும், அதன் அருகில் புகைப்படம் எடுக்கும் அறையும் அமைந்துள்ளன. அவை இரண்டும் வடக்கு பார்த்த வாசற்படியுடன் அமைந்துள்ளன. மேற்படி அறைகளின் எதிரில் பெரிய வராண்டா அமைந்துள்ளது. அந்த வராண்டாவின் வடக்கு பக்கம் கண்ணாடி தடுப்புகளால் தடுக்கப்பட்ட கணக்காளர் அறை உள்ளது. அந்த வராண்டாவில் வடக்கு கிழக்கு திசையில் B-Superintendent இருக்கை அமைந்துள்ளது. மேற்கு பார்த்த வாசற்படியுடன் கண்ணாடி தடுப்புகளால் ஆன அறை ஒன்று உள்ளது. அதில் பதிவு எழுத்தர் இருக்கை மற்றும் தட்டச்சர் இருக்கை அமைந்துள்ளன. பிரதான வாயிலை ஒட்டி கிழக்கு பக்கம் முதல் தளத்திற்கு செல்வதற்காக மாடிப் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. முதல் தளத்தில் கான்பரன்ஸ் ஹாலும், மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறையும் அமைந்துள்ளன. மேற்படி கான்பரன்ஸ் ஹாலில் ஆவணங்கள் தரையில் பரவலாக வைக்கப்பட்டுள்ளன. இந்த திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.D.அறிவழகன் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.V.இராம்குமார் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் தங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டு தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காட்டப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போதுவட்டார போக்குவரத்து அலுவலர் திரு.D.அறிவழகன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.V.இராம்குமார், மோட்டார் வாகன ஆய்வாளர்

திரு.M.S.K.மணிபாரதி, நேர்முக உதவியாளர் திருமதி.T.K.பிரபலதா, இளநிலை உதவியாளர் திரு.A.பிளிக்ஸ், அலுவலக உதவியாளர் திரு.T.ராஜபாண்டியன், டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் திரு.K.பாரத், உதவியாளர் திரு. D. நாகராஜன், இளநிலை உதவியாளர் செல்வி.R.சுகன்யா, A-Section கண்காணிப்பாளர் திருமதி.J.அமல்யா ராஜசேகர்,உதவியாளர் திருமதி.V.மலர்விழி, Elcot Staff திரு.A.T.செல்வகணேஷ், இளநிலை உதவியாளர் திரு.T.சக்திவேல், இளநிலை உதவியாளர் திரு.Y.இரமேஷ், Programmer திரு.A.அன்பு மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் ஓட்டுநர் திரு.செல்வகணேஷ், ஆகிய அலுவலர்கள் பணியில் இருந்தார்கள். அவர்களை சோதனையிட, அனைவரிடமும் ரூ.100/- முதல் ரூ.700/- வரை வைத்திருந்தார்கள். அதில் நேர்முக உதவியாளர் திருமதி.T.K.பிரபலதா அவரிடம் ரூ.4,300/- கைப்பையில் இருந்தது, அவரிடம் மேற்படி பணத்திற்கு தகுந்த முகாந்திரம் கேட்க அவரால் முகாந்திரம் கூற இயலவில்லை. அதனால் மேற்படி பணம் ரூ.4,300/- கைப்பற்றப்பட்டது. மற்றவர்கள் தங்களிடம் இருந்த பணத்திற்காக தகுந்த முகாந்திரம் கூறியதால் அவர்களிடமிருந்து அந்த பணம் கைப்பற்றப்படவில்லை. மேலும், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த தனிநபர்கள் கீழ்கண்ட விவரப்படி இருந்தார்கள்.

| வ.எண். | தனிநபர்கள் (பெயர், விலாசம்) | சோதனையிட அவர்களிடம் இருந்த பணம் | திருப்பி கொடுக்கப்பட்ட பணம் / கைப்பற்றப்பட்ட பணம். |
|---|---|---|---|
| 1. | திரு.M.அரவிந்த்சாமி (23/2018), த/பெ மாரிச்சாமி, எண்.295, ஆலமரத்தெரு, மேக்களூர் கிராமம், திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.8680805036) | ரூ.20,050/- | தக்க முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்டது. |
| 2. | திரு.மாரி (32/2018), த/பெ வடிவேல், 2/28, பெரியார் நகர், கரிக்களாம்பாடி கிராமம், கொளத்தூர் அஞ்சல், ஆவூர் வழி, கீழ்பென்னாத்தூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.9677841037) | ரூ.12000/- | -do- |

| | | | |
|---|---|---|---|
| 3. | திரு.S.கோபிநாதன்(38/2018), த/பெ சுப்பிரமணி, எண்.232, பிள்ளையார் கோயில் தெரு, கீழாத்தூர், திருவண்ணாமலை மாவட்டம்.(கைபேசி எண்.94436 29045) | ரூ.4000/- | -do- |
| 4. | திரு. இராஜேந்திரன் (58/2018), த/பெ வரதராஜ், எண்.15, சன்னதி புது தெரு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.96003 83737) | ரூ.11,000/- | -do- |
| 5. | திரு. சக்திவேல் த/பெ இராமச்சந்திரன், ஆலத்தூர் ரோடு, எண்.289, ஜப்தி காரியந்தல், செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.95783 34745) | ரூ.4,500/- | -do- |
| 6. | திரு. ஆனந்தன் (33/2018), த/பெ வீரப்பன், சிறுளாப்பட்டு, திருநாவலூர் அஞ்சல், உளுந்தூர்பேட்டை தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் (கைபேசி எண்.77081 03587) | ரூ.4,000/- | -do- |
| 7. | திரு. பாபு (60/2018) த/பெ இராதாகிருஷ்ணன், 1204, EB நகர், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.96265 75737) | ரூ.17,000/- | -do- |
| 8. | திரு. விமல்காந்த் (40/2018), த/பெ சிவஞானம், 60, திருநகர், மணலூர் பேட்டை ரோடு, திருவண்ணாமலை. (கைபேசி எண்.98438 87977) | ரூ.20,000/- | -do- |
| 9. | திரு.அன்புவேலன் (30/2018) த/பெ பிச்சாண்டி, எண்.5/10, 87, ரோடு தெரு, அய்யம்பாளையம் கிராமம், சிறுவள்ளூர் அஞ்சல், கலசபாக்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் (கைபேசி எண்.99405 27420) | ரூ.5,500/- | -do- |

| | | | |
|---|---|---|---|
| 10. | திரு.ஆறுமுகம் (28/2018), த/பெ இராமச்சந்திரன், மருத்துவாம்பாடி, திருவண்ணாமலை வட்டம் மற்றும் மாவட்டம் (கைபேசி எண்.90474 86592) | ரு.4,000/- | -do- |
| 11. | திரு.சுரேஷ் (43/2018) த/பெ வெங்கடாசலம், எண்.490, பஷ்வாபுரம், கந்தகவுண்டனூர் அஞ்சல், பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி மாவட்டம் (கைபேசி எண். 94862 59741) | ரு.20,000/- | -do- |
| 12. | திரு.சேஷாத்திரி (44/2018) த/பெ கேசவ நாயுடு, எண்.5/1191, பிள்ளையார் கோயில் தெரு, வடகறை நம்மியந்தல், மேல் சோழங்குப்பம், கலசபாக்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் (கைபேசி எண். 98946 82610) | ரு.3,500/- | -do- |
| 13. | திரு.சீனு (46/2018) த/பெ சண்முகம்,எண்.63/45,கிருஷ்ணாநகர், திருவண்ணாமலை (கைபேசி எண். 94434 35763) | Nil | Nil |
| 14. | திரு.சதிஷ்பாபு (42/2018) த/பெ சுந்தரம், எண்.53/33, பவழகுன்று, ஒத்தவாடை தெரு, திருவண்ணாமலை (கைபேசி எண். 99940 63080) | ரு.1,170/- | பணம் திருப்பி கொடுக்கப்பட்டது. |
| 15. | திரு.செந்தில்குமார் (38/2018) த/பெ கந்தசாமி, எண்.98, மாரியம்மன் கோயில் தெரு, செங்கம் (கைபேசி எண். 94424 92422) | ரு.2,030/- | பணம் திருப்பி கொடுக்கப்பட்டது. |
| 16. | திரு.சிவமுருகன் (38/2018) த/பெ சக்திவேல், இசுக்கழிகாட்டேரி, திருவண்ணாமலை (கைபேசி எண். 94423 12823) | ரு.1,500/- | -do- |

| | | | |
|---|---|---|---|
| 17. | திரு.அஷ்ரப்ஹலி (36/2018) த/பெ சாதுல்லா, சமுத்திரம், நல்லவன்பாளையம் அஞ்சல், திருவண்ணாமலை வட்டம் மற்றும் மாவட்டம் (கைபேசி எண்கள். 99942 17597, 94882 37597) | ரு.1,230/- | -do- |
| 18. | திரு.லோகேஷ்வரன் (26/2018) த/பெ ஆறுமுகம், 1117, ஆலமரத்தெரு, பொதியந்தாங்கல், வடமாதிமங்கலம், போளூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் (கைபேசி எண். 90802 93142) | ரு.1,200/- | -do- |
| 19. | திரு.மாணிக்கம் (23/2018) த/பெ ஏழுமலை, 24/1, அம்மன் கோயில் தெரு, கீழ்வணக்கம்பாடி, தண்டராம்பட்டு தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் (கைபேசி எண். 86809 71641) | ரு.600/- | -do- |
| 20. | திரு.சரவணன் (29/2018) த/பெ செல்வராஜ், எண்.134/79, முத்து விநாயகர் கோயில் தெரு, திருவண்ணாமலை (கைபேசி எண். 99408 84359) | ரு.100/- | -do- |
| 21. | திரு.விக்ரமன் (25/2018) த/பெ ஜெயராஜ், எண்.756, அம்பேத்கார் நகர், தரடாப்பட்டு, தண்டராம்பட்டு தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் (கைபேசி எண். இல்லை) | ரு.1,820/- | -do- |
| | மொத்தம் | ரு.1,25,550/- | |

அதே சமயத்தில், வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் வெளியே மற்றும் மைதானத்தில் இருந்த நபர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் தணிக்கைக்கு வந்ததாக தெரிந்தவுடன் அங்கிருந்த சுமார் 30, 40 பேர்கள் காம்பவுண்ட் ஏறிகுதித்து ஓடிவிட்டார்கள். அவர்களை பிடிக்க எத்தனித்தும் பிடிக்கமுடியவில்லை. பின்னர் திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அனைத்து அறைகளிலும் முழுமையான சோதனை செய்யப்பட்டது. அப்போது முதல் மாடிக்கு செல்லும் படிக்கட்டுக்கு கீழே கட்டாக பணம் ரு.70,000/-

கேட்பாரற்று இருந்தது, அதன் பின்னர் அங்கிருந்த Junction Box கீழே பணம் ரூ.6,000/- கேட்பாரற்று கிடந்தது, அதன் அருகில் வைக்கப்பட்டிருந்த பேட்டரிகள் இடைவெளியில் பணம் ரூ.10,500/- கேட்பாரற்று கிடந்தது, அதன்பின்னர் புகைப்படம் எடுக்கும் அறையில் கிழக்கு பக்கம் பார்த்தவாறு வைக்கப்பட்டிருந்த கடவுள் படத்திற்கு பின்னே இருந்த பணம் ரூ.4,000/- கேட்பாரற்று இருந்தது, அங்கிருந்தவர்களிடம் மேற்படி பணத்திற்கு யாரேனும் உரியவர்கள் உள்ளீர்களா என்று விசாரிக்க யாரும் பணத்திற்கு சொந்தம் வேண்டி வரவில்லை. அந்த பணத்தை யாரும் பெற முன் வராததால், அந்த பணம் ரூ.90,500/- கேட்பாரற்று கிடந்த கணக்கில் வராத பணமாக (Unaccounted money) கைப்பற்றப்பட்டது. பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.அறிவழகன் அவர்களின் பயன்பாட்டில் உள்ள அரசு வாகனம் TN 25 AG 2525 என்ற பொலிரோ ஜீப்பை சோதனையிட அதில் பணம் ஏதும் இல்லை. பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.இராம்குமார் அவர்களிடம் தங்களுடைய வாகனம் எங்கே என்று கேட்க அவர் என்னிடமும் காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினர்களை அழைத்துக்கொண்டு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அருகில் இருந்த மைதானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு சக்கர வாகனம் பஜாஜ் பிளாட்டினா புளு கலர் TN 77 F 1111 வாகனத்தை காட்டினார். அதனை சோதனையிட மேற்படி இரண்டு சக்கர வாகனத்தின் சைட்பாக்ஸ் திறக்க சொல்லி பார்க்க அதில் இரண்டாயிரம், ஐநூறு மற்றும் நூறு, இருநூறு ரூபாய் நோட்டுக்கள் கட்டு கட்டாக இருந்தது, அதனுடன் 4 A-4 Sheet-ல் மற்றும் இரண்டு A-4 Sheet நீட்டு வாக்கில் கிழிக்கப்பட்ட இரண்டு தாளில் தேதிவாரியாக மொத்தம் 6 தாள்கள் இருந்தன. அதை பார்க்க தேதிவாரியாக இலஞ்சம் பெற்ற பணம் 26.09.2018 முதல் 11.10.2018 வரை பெற்ற பணத்தை திரு.இராம்குமார் அவர்கள் எழுதி குறித்து வைத்துள்ளார். மேற்படி தாள்கள் அனைத்திலும் நானும், வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.இராம்குமார் மற்றும் காவல் ஆய்வாளர் திரு.ரஜனிகாந்த் ஆகியோர் கையொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி வாகனத்தின் சைட்பாக்ஸில் இருந்த பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.7,78,330/- இருந்தது. பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.இராம்குமார் அவர்களிடம் மேற்படி பணத்திற்கான முகாந்திரம் கேட்க அவர் தனது சேமிப்பு பணம் என்றும் தனது வங்கி கணக்கில் இருந்து எடுத்த பணம் என்று கூறினார். அவரிடம் தங்களுக்கு எவ்வளவு சம்பளம் என்று கேட்க அவர் ரூ.70,000/- கைக்கு வருகிறது என்று கூறினார். பின்னர் அவரிடம் எவ்வளவு நாட்களாக சேமிக்கிறீர்கள் தாங்கள் மாத மாதம் எவ்வளவு உங்களின் வங்கி கணக்கில் சேமிக்கிறீர்கள் என்று கேட்க அவரால் பதில் ஏதும் சொல்லமுடியவில்லை. அதனால்

மேற்படி பணம் ரூ.7,78,330/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் நேர்முக உதவியாளர் திருமதி.தி.கு.பிரபலதா அவர்களிடம் Movement Register பற்றி கேட்க, அவர் அந்த பதிவேட்டை எடுத்து வந்து கொடுத்ததை பார்க்க, அது 45 பக்கங்கள் கொண்ட ஆவணமாக இருந்தது, 01.11.2018-ஆம் தேதி பதிவுகள் ஏதும் இல்லை. வருகைப்பதிவேட்டை கேட்டு பெற்று பார்க்க அதில் 01.11.2018-ம் தேதியன்று அனைத்து அலுவலர்கள் அலுவலகத்திற்கு வந்துள்ளதாக பதிவு இருந்தது ஒரு தட்டச்சர் மட்டும் தற்காலிக விடுப்பு என இருந்தது. மேலும் அலுவலகப்பணியாளர்களின் அலுவலக கையிருப்பு பதிவேடு கேட்டு பெற்று பார்க்க அதில் பதிவுகள் இருந்தது. மேலும், 01.11.2018-ம் தேதியில் All Counter headwise consolidated statement பற்றி கேட்க, அவர் அனுமதி சீட்டு கட்டணம், அனுமதி சீட்டு புதுப்பித்தல் கட்டணம், தகுதிச்சான்று புதுப்பித்தல் கட்டணம், தற்காலிக அனுமதி சீட்டு கட்டணம், அதற்குரிய வரி, ஆகமொத்தம் ரூ.1,21,334/- அலுவலகத்தில் ரொக்கமாக கையிருப்பில் உள்ளது. கடந்த 30.10.2018 மற்றும் 31.10.2018 ஆகிய இரண்டு நாட்களின் 1 சதவீத வரி ரூ.6,003/-, நிலை முன்பதிவேடு ரூ.100/- ஆகியவை இன்றைய தேதியில் கையிருப்பில் உள்ளது. மேற்படி All Counter headwise consolidated statement மொத்தம் மூன்று பக்கங்களை கொண்ட தாள்களாக உள்ளது, மேலும் பணப்பதிவேடு கேட்டு பெற்று பார்க்கப்பட்டது அதிலும் 31.10.2018 வரை எழுதப்பட்டிருந்தது. மேற்படி அனைத்து ஆவணங்களிலும் நானும், வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.இராம்குமார் மற்றும் காவல் ஆய்வாளர் திரு.ரஜனிகாந்த் ஆகியோர் கையொப்பம் செய்து, அந்த பதிவேடுகள் விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் நான், வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.இராம்குமார் மற்றும் நேர்முக உதவியாளர் திருமதி.பிரபலதா ஆகியோர்களை விசாரணை செய்து, வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேற்சொன்ன திடீர் தணிக்கையின் போது மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.இராம்குமார் அவர்களின் இரண்டு சக்கர வாகனத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட கையூட்டு என்று கருதப்படும் இலஞ்சப்பணம் ரூ.7,78,330/-, அலுவலகத்தில் கேட்பாரற்று இருந்த பணம் ரூ.90,500/- மற்றும் அலுவலகத்தில் இருந்த தனிநபர்களிடமிருந்து கையூட்டு கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதப்படும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,25,550/-, பின்னர் நேர்முக உதவியாளர் திருமதி.பிரபலதா அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,300/- ஆக மொத்தம் ரூ.9,98,680/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி திருவண்ணாமலை வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் கூட்டு தணிக்கை 01.11.2018-ஆம் தேதி இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த

செயல்முறையின் நகல் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 அவர்களுக்கும் வழங்கப்பட்டது. இன்று 02.11.2018-ஆம் தேதி பிற்பகல் 1500 மணிக்கு திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டதில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1.திரு.இராம்குமார் அவர்களின் இரண்டு சக்கர வாகனத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட இலஞ்சப்பணம் ரூ.7,78,330/-, அலுவலகத்தில் கேட்பாரற்று இருந்த பணம் ரூ.90,500/- மற்றும் அலுவலகத்தில் இருந்த தனிநபர்களிடமிருந்து கையூட்டு கொடுக்க வைத்திருந்த பணம் ரூ.1,25,550/-, பின்னர் நேர்முக உதவியாளர் திருமதி.பிரபலதா அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,300/- ஆக மொத்தம் ரூ.9,98,680/- கைப்பற்றினோம் மற்றும் சில ஆவணங்களையும் கைப்பற்றினோம். கைப்பற்றப்பட்ட பணம் ரூபாய் 9,98,680/-ஐ திருவண்ணாமலை கருவூலத்தில் பாதுகாப்பாக வைக்கபட்டு ரசீது பெறப்பட்டது. இன்று 02.11.2018-ஆம் தேதி பகல் 1500 மணிக்கு திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை அலுவலகத்தில் ஆஜராகி தட்டச்சு செய்த புகார் ஒன்றை கொடுக்கிறேன். அதன் பேரில் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் கேட்டும்போது கைப்பற்றப்பட்ட பணத்தை திருவண்ணாமலை கருவூலத்திலிருந்து எடுத்து ஆஜர்செய்கிறேன். (Sd.xxxx) திரு.து.கிருஷ்ணமூர்த்தி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Sir,

Received the complaint on 02.11.2018 at 1500 hrs and sent a copy to DVAC for getting previous approval from the concerned Department to register a regular case.
Sd.XXXXX 02.11.2018 (M.Rajanikanth, Inspector of Police, V&AC, Tiruvannamalai.

Sir,

Received the complaint on 02/11/2018 at 15.00 hrs and sent a copy to DVAC for getting previous approval from the concerned Department to register a case against the AO's as per Sec 17 (A) of Prevention of Corruption (Amendment) Act 2018 and after getting previous approval from the concerned Department through DVAC, a case was registered in Tiruvannamalai V&AC Cr.No 08/19, u/s. 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 27.03.2019 at about 1030 Hrs. The FIR in original along with the complaint was sent to the Hon'ble CJM and Special Judge, Tiruvannamalai and sent the copies to the officers concerned.
Sd.XXXXX 27.03.2019 (M.Rajanikanth, Inspector of Police, V&AC, Tiruvannamalai.

**Enclosure: 1. A Copy of Tiruvannamalai Treasury chalan No.65638.**

27/3/19

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Tiruvannamalai.